2022 ஏப்ரல் 21]

அவர்களின் அனுமதியைப் பெற்று, நிதி ஏற்பாட்டின்படி, அதைச் செய்து தருவதற்கான நடைமுறைகளை இந்த அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

சூரிய மின் வேலி

***691—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதியில் உள்ள விவசாய நிலங்களைப் பாதுகாக்க சூரிய மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினருடைய கள்ளக்குறிச்சி தொகுதியில் யானை போன்ற வன உயிரினங்களின் நடமாட்டம் இல்லாததாலும், மான், காட்டுப் பன்றி, மயில், போன்ற சில வன உயிரினங்களால் ஏற்படும் பயிர்ச் சேதங்கள் மிகவும் குறைவாக உள்ளதாலும், சூரிய மின் வேலி அமைக்கும் தேவை எழவில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட சின்ன சேலம், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம் ஆகிய ஒன்றியங்களிலுள்ள கருந்தலாகுறிச்சி, செம்பாக்குறிச்சி, கருங்குழி, ஈரியூர், வாணவரெட்டி, விளம்பாவூர், மலைக்கோட்டாலம், கணங்கூர், சாத்தனூர், கீழ்நாரியப்பனூர், ஒகையூர், பொரசக்குறிச்சி, வேளாக்குறிச்சி, நின்னையூர், சித்தலூர், கூத்தகுடி ஆகிய கிராமங்களில் நெல்,*

மரவள்ளி, கரும்பு, கொள்ளு போன்ற விவசாயப் பயிர் வகைகள் விளைவிக்கப்படுகின்றன. உளுந்தூர்பேட்டை மற்றும் கள்ளக்குறிச்சி வனச் சரகத்திற்குட்பட்ட வனப் பகுதியில் வாழும் மான், மயில், காட்டுப் பன்றி போன்ற விலங்குகள் பயிர்களைச் சேதப்படுத்தி வருகின்றன. மேலும், ஓநாய், நரி, செந்நாய் ஆகிய வன விலங்குகளால் கால்நடைகள் தாக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் மிகவும் துன்பப்படுகின்றனர். எனவே, வனப் பகுதியை ஒட்டியுள்ள நிலங்களைச் சுற்றி சூரிய மின்வேலி அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் வனக் கோட்டத்தில் கள்ளக்குறிச்சி தொகுதியில் உள்ள காப்புக் காடுகளின் மொத்தப் பரப்பளவு 12,284.107 ஹெக்டேர் ஆகும். இப்பகுதியில் யானை போன்ற வன உயிரினங்கள் நடமாட்டம் இல்லை. இருப்பினும் காட்டுப் பன்றி, மயில் மற்றும் மான் ஆகிய வன உயிரினங்களால் மட்டுமே மிகக் குறைந்த அளவில் பயிர்ச் சேதங்கள் ஏற்பட்டு வருகின்றன. கடந்த 2020–2021 மற்றும் 2021–2022 ஆகிய ஆண்டுகளில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பயிர்ச் சேதமாக ஏற்பட்ட 8 நிகழ்வுகளின் மொத்தப் பரப்பளவு 4.26 ஏக்கர் மட்டுமே ஆகும். இதற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.1.16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கால்நடைகளுக்கு ஏதேனும் பாதிப்பு இருந்தால், அதுகுறித்து ஆராய்ந்து தேவைப்படும்பட்சத்தில் விகிதாச்சார அடிப்படையில் உரிய இழப்பீடு தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம், விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மாவட்டம்; கல்வராயன்மலைப் பகுதியை உள்ளடக்கியது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோன்று, அங்கே யானைகள் இல்லை. ஆனால்,

2022 ஏப்ரல் 21]

அனைத்து வன விலங்குகளாலும் அங்கிருக்கிற பயிர்கள் சேதம் அடைவது உண்மை. விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மாவட்டம் என்பதால் இங்கே தனியாக DFO–*மாவட்ட வன அலுவலகம் இல்லை. கல்வராயன்மலையிலிருந்து விழுப்புரம் சென்று பாதிப்பு அடைந்துவிட்டதாக ஒருவர் மனு கொடுத்து, அதற்கான தீர்வு காண முடியாது. அதனால் பெரும்பாலான விவசாயிகள் மாவட்ட வன அலுவலகத்திற்குத் தெரியப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுவதில்லை. எல்லா அலுவலகங்களையும் பிரித்து கள்ளக்குறிச்சிக்கென்று தனி மாவட்ட அலுவலகம் எடப்பாடியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இதுவரை* DFO *அதிகாரியும் இல்லை; மாவட்ட வன அலுவலகக் கட்டடமும் இல்லை. ஆகையால் அதனைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஏற்படுகிற சிக்கல் என்னவென்றால், அங்கே வாழ்கிற வன விலங்குகளுக்கு போதிய நீராதாரம் இல்லை. அதனால்தான் அவை காட்டுப் பகுதியிலிருந்து விவசாய நிலங்களுக்கு வருகின்றன. ஆகையால் அங்கே borewell *அமைத்து, குட்டைகள் அமைத்து, தேவைப்படுகிற தண்ணீர் வசதிகளை வனப் பகுதியிலேயே ஏற்படுத்திவிட்டால், வன விலங்குகள் விவசாய நிலங்களுக்கு வருவதற்கான வாய்ப்பு ஏற்படாது. ஆகையால், தண்ணீர் அவசியம் தேவை; அங்கே* borewell *போடப்பட வேண்டும்; குட்டைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியில் குறிப்பிட்ட பகுதியில் யானைகள் அல்லாது மற்ற விலங்குகள் இருப்பது உண்மை. ஆனால், அவற்றால் பெரிய அளவில் விவசாய நிலங்களுக்குப் பாதிப்பு இல்லை என்பதைத்தான் தெரிவித்திருந்தேன். கடந்த இரண்டு ஆண்டுகளையும் சேர்த்து 4, 5 மற்றும் 8 என்ற அளவில்தான் பயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.1.16 இலட்சம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. எனினும், மாவட்ட வன அலுவலகம்–*DFO office *தேவை என்கிறபோது அலுவலர்களை வைத்து ஆய்வு செய்து, ஆராய்ந்து, தேவைப்படும்பட்சத்தில்*

அதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. G.V. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டப் பேரவைத் தொகுதியில் எட்டயபுரம் வட்டம், புதுப்பட்டிகுளம் ஏறக்குறைய 500 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. அந்த இடத்தில் காட்டுப் பன்றிகளும், விளாத்திகுளம் வட்டம், மந்திகுளம் கிராமத்தில் ஏறக்குறைய 1,000–க்கும் மேற்பட்ட மான் இனங்களும், காட்டுப் பன்றிகளும் இருக்கின்றன. மக்காச்சோளம் மற்றும் சோள வகைகள் பயிரிடப்படும் விவசாய நிலங்களிலும், பருத்திக் காடுகளிலும் மிகவும் அதிகமாக இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேளுங்கள். கேள்விக்கு வாருங்கள். துணைக் கேள்வியென்றால், சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. G.V. மார்க்கண்டேயன்: விளாத்திகுளம் பகுதியில் காப்புக் காடுகள், Reserve forest இல்லை. எனவே, வனத் துறையின்மூலம் இந்த வன விலங்குகளைப் பிடித்து, Reserve forest area–வில் கொண்டு சென்று விடப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்துவதற்கு புதிதாக ஒரு திட்டத்தை 25–4–2022 அன்று வனத் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிப்பாக நான் அறிவிக்க உள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Good.

2022 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: அந்த மான்களையெல்லாம் பிடிப்பதற்காகத்தான் வேட்டைத் தடுப்புக் காவலர்களை அதிகப்படுத்தயிருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் தேவையான இடங்களுக்கு புதிதாக வேட்டைத் தடுப்புக் காவலர்களைப் பணியமர்த்தி, அவர்கள் மூலமாக அந்த விலங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலை மற்றும் ஊரகச் சாலைகளின் இரு புறங்களிலும் முட்புதர்கள் அதிகமாக இருக்கின்றன. அதனால், வன விலங்குகள் அந்தச் சாலைகளின் நெடுகே செல்கின்றபோது, வாகன ஓட்டிகளுக்கும், நடந்து செல்கிறவர்களுக்கும் அவை தெரியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அச்சாலைகளின் இருபுறங்களிலும் இருக்கின்ற முட்புதர்களை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை, மூன்று மீட்டர் அளவிற்கு சுத்தம் செய்து, அச்சாலையை விரிவுபடுத்தினால் சாலையில் செல்கிற வாகன ஓட்டிகளுக்கும், நடந்து செல்கிறவர்களுக்கும் பாதுகாப்பாக அமையும். அச்சாலைகளின் இருபுறங்களிலும் வனப் பகுதி இருக்கின்ற காரணத்தினாலும், வன விலங்குகள் அப்பகுதிகளில் கடந்து செல்கின்ற நிலை இருக்கிற காரணத்தினாலும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அந்தப் புதர்களை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனை. ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அளவிற்கு வேட்டைத் தடுப்புக் காவலர்களைப் பயன்படுத்தி, சாலைகளின் இருபுறங்களிலும் எப்பொழுதுமே சுத்தப்படுத்தி வைப்போம். அவ்வாறு சுத்தப்படுத்தாத இடங்களில், நிச்சயமாக வேட்டைத் தடுப்புக் காவலர்கள்மூலம் சுத்தப்படுத்தித் தரப்படும் என்பதைத்

தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***11729—திருமதி க. சிவகாமசுந்தரி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, தரகம்பட்டியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, தரகம்பட்டியில் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

திருமதி க. சிவகாமசுந்தரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் கடவூர் வட்டம் 2010 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கடவூர் வட்டத்தில் 23 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. இங்கு சுமார் 1,17,000 மக்கள் வசித்து வருகின்றனர். கடவூர் ஊராட்சி, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியின் கடைக்கோடி பகுதியான கடவூர் மலை அடிவாரப் பகுதியில் உள்ளது. இப்பகுதியிலிருந்து இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களைப் பதிவு செய்ய, ஓட்டுநர் உரிமம் பெற மற்றும் புதுப்பிக்க, போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் செல்ல வேண்டுமானால், சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள குளித்தலைக்குச் செல்ல*